# அந்நிய நாட்டவர்களின் 7 கடைகளுக்கு சீல் வைப்பு

கோலாலம்பூர், ஜன. 15-
தலைநகர், சௌகிட் பகுதியிலுள்ள ஜாலான் ஹாஜி தாயிப்பில் அந்நிய நாட்டவர்கள் நடத்தி வந்த 7 அங்காடிக் கடைகளை கோலாலம்பூர் மாநகர் மன்றம் நேற்று சீல் வைத்தது.

அதேவேளையில், அக்கடைகளிலிருந்த பொருட்களையும் அது பறிமுதல் செய்தது. மாநகர் மன்றத்தின் அமலாக்கப் பிரிவினர் மேற்கொண்ட சோதனையின்போது இந்நடவடிக்கை எடுக்கப்பட்டதாக நேற்று வெளியிட்ட ஓர் அறிக்கையில் அது கூறியது.

இச்சோதனை நடவடிக்கையின்போது நான்கு மருந்து கடைகளும் இரண்டு காலணி கடைகளும் ஒரு சாப்பாட்டுக் கடையும் சீல் வைக்கப்பட்டதாக அது கூறியது.சோதனையின்போது அவர்கள் அனைவரும் லைசென்ஸ் இன்றி சட்ட விரோதமான முறையில் அங்கு வியாபாரம் செய்து வந்தது தெரிய வந்தது. 2016ஆம் ஆண்டு கோலாலம்பூர் அங்காடி லைசென்ஸ் சட்டத்தின் கீழ் அவர்களுக்கு எதிராக இந்நடவடிக்கை எடுக்கப்பட்டது.தலைநகரைச் சுற்றியுள்ள பல பகுதிகளில் கோலாலம்பூர் மாநகர் மன்றம் இது போன்ற சோதனை நடவடிக்கையை மேற்கொள்ளும்.

கோலாலம்பூரிலுள்ள 11 நாடாளுமன்றத் தொகுதியிலும் இதுபோன்ற சோதனைகள் மேற்கொள்ளப்படும் எனவும் அந்த அறிக்கை கூறியது.